# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## ஜெபத்தின்மூலம் கோமாவிலிருந்த ஒரு நோயாளி நினைவு திரும்பினார்

### 33 நாடுகளிலிருந்து வந்தவர்கள் பங்கேற்ற 13வது WCDN சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ கருத்தரங்கு ஸ்பெயினில் நடைபெற்றது




WCDN 13வது சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ கருத்தரங்கு (படம் 2); காட்சியளிப்பில் Dr. திமோத்தேயு சங், Dr. ராபர்ட் வாக்னர் நவாஸ்,Dr. சிப்போராள் நகுமி ஆகியோர் (படம் 1, 3, 8, 9); மருத்துவர்கள் தேவனுடைய கிரியைகளை நிரூபிக்கிற அநேக சுகமான சாட்சிகளை வழங்கினர் (படம் 7); WCDN நிறுவனர் அறிவர் .ஜேராக் லீ அவர்களுக்குப் பதிலாக ஸ்பெயின் கருத்தரங்கு ஒழுங்கமைப்பு குழுவிடமிருந்து பாராட்டு மடலை Dr. கில்பர்ட் Y. சே பெற்றுக்கொண்டார் (படம் 4) மற்றும் கிரிஸ்டல் பாடகர்களின் கலைநிகழ்ச்சி, பங்குப்பெற்றவர்கள், புகைப்பட நேரம் (படம் 5, 6, 10, 11).

உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம் (WCDN) சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமை யால் குணமான சாட்சிகளை மருத்துவ தரவின் அடிப்படையில் நிரூபித்து கொண்டு வருகின்றது. 13வது WCDN சர்வதேச கருத்தரங்கானது ஸ்பெயினில் உள்ள வெலன்ஸியாவில் ஜூன் 10–11, 2016ல் நடைபெற்றது.

அமெரிக்கா, ரஷியா, UK, இத்தாலி, போலாந்து மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகள் உட்பட 33 நாடுகளிலிருந்து 300க்கும் மேற்பட்ட மருத்துவர் –களும், நிபுணர்களும் பங்குப் பெற்றனர்.

வேறுபட்ட நாடுகளிலிருந்து அநேக ஜனங்கள் வந்து பங்குப்பெற்றதால் நேரடியாக ஆங்கிலம், ஸ்பானியம், ரஷ்யம் மற்றும் இத்தாலி ஆகிய நான்கு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. முதல் நாளில் உள்ளூர் குழுவினர் துதி ஆராதனை–யோடு நிகழ்ச்சியை ஆரம்பித்தனர். Dr. ஜோஸ் கார்ஷியா அவர்களின் தலைமையின்கீழ் காலை அர்ப்பணிப்பு ஆரம்பமானது. அதன்பிறகு பங்கு பெறும் நாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன; வரவேற்பு செய்தியானது ஸ்பெயின் கருத்தரங்கு ஒழுங்கமைப்பு குழுவின் தலைவர் Dr. ஜூவான் கார்லோஸ் சோலன் மற்றும் WCDN தலைவர் Dr. கில்பர்ட் Y. சே ஆகியோரால் வழங்கப்பட்டது. WCDNனின் நிறுவனர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஊழியமானது DVD மூலமாக காண்பிக்கப்பட்டது.

அதன்பிறகு தொடர்ந்த காட்சியளிப்பில் பல்வேறு வகையான சுகமாகுதலின் கிரியைகள் காண்பிக்கப்பட்டன: முதுகு காசநோய் மற்றும் முதுகு கட்டி கீழங்கவாதம் பற்றி Dr. ஜெயசந்திரன் பால்சாமி அவர்களாலும் (இந்தியா); கடுமையான மூளையழற்சி குறித்து Dr. தீமோத்தேயு சங் அவர்களாலும் (மலேசியா); முதுகெலும்பு முறிவு குறித்து Dr. சிப்போராள் நகுமி அவர்களாலும் (கென்யா); பித்தப்பை கல் பற்றி Dr. ராபர்ட் வாக்னர் நவாஸ் அவர்களாலும் (கொலோம்பியா); மலட்டுத்தன்மை பற்றி Dr. டேவிட் ஹியு அவர்களாலும் (சிங்கப்பூர்); ஆர நரம்பு வாதம் குறித்து Dr. கில்பர்ட் சே அவர்களாலும் (கொரியா); பிற்பக்கவாட்டு முழங்கால் காயம் Dr. ப்ரையன் S. ஹியோ அவர்களாலும் (3 மற்றும் 4 பக்கம் பார்க்க) வழங்கப்பட்டது.

தேவன் வானத்தையும் பூமியையும் மனிதர்கள் உட்பட அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்தவராக இருப்பதால், அவரால் எவ்வித வியாதியையும் குறையையும் சுகமாக்க முடியும். மலேசியாவைச் சார்ந்த Dr. தீமோத்தேயு சங் கடுமையான மூளையழற்சியிலிருந்து சுகமான சாட்சியை வழங்கினார். அவர் சொன்னது, “ஒரு பெண் என்னுடைய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, கோமா நிலையை அடைந்தாள். இதற்கு முன்பு மலேசியாவில் நடைபெற்ற கருத்தரங்கில் நான் பங்கேற்று, உயர்திரு. ஹீசன் லீ அவர்களால் நடத்தப்பட்ட கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தில் பங்குபெற்றேன். நான் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டை ஜெபத்தை உயர்திரு. லீ மூலம் நோயாளிக்குப் பதிலாக பெற்றேன் (அப். 19:11–12). அதன்பின்பு நோயாளி நினைவு திரும்பி, சீக்கிரத்திலேயே நலமடைந்தார். நாங்கள் கால நேர சூழ்நிலைக்கு அப்பாற்பட்ட கிரியைகளை அனுபவித்தோம்.”

Dr. ஆல்வின் J. வ்வாங் (கொரியா) அவர்களால் “சிருஷ்டிப்பும் அறிவியலும்,” போதகர் ஜோஸ் விக்டர் டக்ஹண்ட் (அமெரிக்கா) அவர்களால் “அறிவியலுக்கும் ஆவிக்குரிய உலக கண்ணோட்–டத்திற்கு இடையிலான நல்லிணக்கத்தை கண்டறிதல்” மற்றும் Dr. ஆண்ட்ரே கஷிரொவ்ஸ்கி (இஸ்ரேல்) அவர்களால் “பரலோகம்” போன்ற சிறப்பு சொற்பொழிவுகள் அநேக பங்காளர்களின் கவனத்தை ஈர்த்தது. ஸ்பெயின் கருத்தரங்கு ஒழுங்கமைப்பு WCDN நிறுவனர் Dr. ஜேராக் லீ அவர்களுக்கு தங்களது நன்றியின் இருதயத்தை தெரிவிக்க ஒரு பாராட்டு மடலை வழங்கியது.

மான்மின் மத்திய திருச்சபையின் கலைக் குழுக்களில் ஒன்றான கிரிஸ்டல் பாடகர் குழு பல்வேறு மொழிகளில் பாடல்கள், விசிறி நடனம், ஸ்பானிய பாரம்பரிய நடன நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு வகையிலான கலைநிகழ்ச்சிகளை காண்பித்தனர். பங்கு பெற்றவர்கள் தொடப்பட்டு எழுந்து நின்றவர்களாய் தேவனுக்கு மகிமையை செலுத்தினார்கள். அவர்கள் சொன்னதாவது, “இன்றும் நடைபெறுகிற தேவனுடைய கிரியைகளை நம்மால் காண முடிகிறது. மருத்துவ தரவுகளைப் பயன்படுத்தி தெய்வீக சுகமளிக்கும் கிரியைகளை வேதாகமத்தின் நம்பகத்தன்மைக்குச் சான்றாக நாங்கள் காண்பித்தோம். அது அற்புதமும் சுவாரசியமாகவும் இருந்தது.”

WCDN–னின் தலைமையகம் தென்கொரியாவில் உள்ளது. இது ஸ்தாபன பாகுபாடின்றி கிறிஸ்தவ மருத்துவர்கள் ஒருங்கிணையும் ஒரு குழுமமாகும். அவர்கள் கிறிஸ்தவ மருத்துவர்களுக்கிடையே தொடர்பையும், ஒருங்கிணைப்பையும் ஊக்குவித்து தேவ ராஜ்யத்திற்காக வேலை செய்யும்படிக்கு வருடாந்திர கருத்தரங்கை நடத்துகின்றனர். 14வது கருத்தரங்கான, அடுத்த கருத்தரங்கு, 2017ல், ரஷியாவில் நடைபெறவிருக்கிறது.

# இயேசுவானவர் தம் கரங்களிலும் கால்களிலும் ஆணிகளால் அடிக்கப்பட்டதன் காரணம்



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).

பாவிகளான மனுக்குலம் அனைத்தையும் மீட்கும்படியாக விரும்பிய தேவனுடைய அநாதி திட்டத்தில் இயேசுவானவர் சிலுவை பாடுகள் அடைந்தார். அப்படியானால் இயேசுவானவர் தம் கரங்களிலும் கால்களிலும் ஆணிகளால் அடிக்கப்பட்டதன் அநாதி திட்டத்தில் உள்ள அர்த்தம்தான் என்ன?

### 1. இயேசுவானவர் தம் கரங்களிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டதன் காரணம்

முக்கால்வாசியான மரண தண்டனைகள் சரீரத்தின் மேல் மிக அதிகமான வேதனையைக் கொண்டு வராமல் ஒப்புமையில் மிகக் குறுகிய கால அளவிலேயே முடிந்துவிடும். ஆனால், சிலுவை மரணம் என்பது மிக நீண்ட நேரமாக தாங்கொண்ணா வேதனையை கொடுக்கும். ஒரு நபரது இரண்டு கரங்களும் கால்களும் மரச் சிலுவையில் ஆணியால் அடிக்கப்பட்ட பின், அதை நிலத்தில் செங்குத்தாக நிறுத்துகையில் அவரது சரீரத்தில் எடை அனைத்தும் கீழ்நோக்கி நகர்ந்து எங்கே ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளதோ அங்கே அந்த இடங்களின் மேல் இன்னும் அதிகமான மகா வேதனையை கொடுக்கும். மேலும், மரண தண்டனை அளிப்பவர்கள் சரீரத்தின் மிக முக்கியமான பகுதிகளை ஆணி அடிக்க தவிர்ப்பதால், அந்த நபர் தொடர்ந்து இரத்தம் சிந்தி அவர் தம் கடைசி மூச்சைவிடும் வரைக்கும் வேதனைக்கும் பாடுகளுக்கும் உள்ளாவார்.

எந்த காரணத்திற்காக இயேசுவானவர் தம் கரங்களிலும் கால்களிலும் ஆணிகளால் அடிக்கப்பட்டிருக்க வேண்டும்? மனிதனை அவன் தன் கரங்களினாலும் கால்களினாலும் செய்த செய்யப்போகிற பாவங்கள் அனைத்திலிருந்தும் மீட்பதற்காக.

மாற்கு 9:43–45ல் வாசிக்கிறோம், "உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்." பாவமற்ற இயேசுவானவர் அவர்தம் கரங்களிலும் கால்களிலும் ஆணிகளால் அடிக்கப்பட்டு, இரத்தஞ்சிந்தி மரித்ததால் நாம் நம்முடைய கரங்களினாலும் கால்களினாலும் செய்த பாவங்களிலிருந்து நம்மை மீட்டார்.

ஆதலால், யாரொருவர் இயேசுவை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறாரோ அவர் பாவ அறிக்கை செய்து, மனந்திரும்பும்போது தம் கரங்களையும் கால்களையும் தறித்துப் போடாமல் மன்னிப்பை பெற முடியும். மேலும், பரிசுத்த ஆவியின் வல்லமையால் பாவங்கள் அனைத்திலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள முடியும். நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படியாகவும், நரகத்தின் அக்கினியில் விழுவதிலிருந்து நம்மை தடுக்கும்படியாகவும், இயேசுவானவர் தம்மை சிலுவையிலே கோரபாடுகளை அடையும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்.

இருப்பினும், இயேசுவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து தங்கள் உதடுகளினால் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பிவிட்டோம் என்று சொல்லுகிறவர்கள் மத்தியிலே அநேகர் இன்னமும் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 1 யோவான் 1:6 நமக்குச் சொல்கிறது, "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்."

இயேசுவானவர் தம் கரங்களிலும் கால்களிலும் உங்களுடைய பாவத்திற்காக ஆணிகளால் அடிக்கப்பட்டு சிலுவையிலே பாடுபட்டார் என்று உண்மையில் நீங்கள் விசுவாசித்தால், உங்களால் இனி ஒருபோதும் பாவம் செய்ய முடியாது.

### 2. நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுதலைப் பெற ஒளியிலே நடவுங்கள்

சிலுவை மரத்திலே மரித்ததனால் பாவமற்ற இயேசு நமக்காக சபிக்கப்பட்டார். இதை விசுவாசிக்கிற நாமும் நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்று நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுதலையாகியுள்ளோம். விசுவாசித்து இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் வியாதிகள், பெலவீனங்கள், வறுமை மற்றும் எல்லா வகையான பேரழிவுகளில் இருந்தும் விடுதலையாக்கப்பட்டுள்ளனர்.

ஆக தேவனுடைய பிள்ளைகளாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டு தேவனுடைய வார்த்தையின்படி வாழ்கிறவர்கள் எப்போதும் அவருடைய கவனமான கண்களின்கீழ் இருப்பார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்தாலும்கூட சோதனைகளும் பாடுகளும் அவர்களது வழியில் வந்தாலும், அந்த சோதனைகள் ஆசீர்வாதங்களுக்குத்தான். யாக்கோபு 1:12, "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்." சொல்லப்பட்டபடி, ஸ்தோத்திரத்தோடே சோதனைகளை மேற்கொள்கிறவர்களுக்கு அது ஆவி மற்றும் மாம்சம் ஆகிய இரண்டிலும் ஆசீர்வாதங்களை கொண்டு வரும்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழாததால் உங்கள் வழியில் சோதனைகளும் பாடுகளும் வந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உங்களது கடந்தகால வழியிலிருந்து திரும்பி நீங்கள் தீவிரமாக மனந்திரும்ப வேண்டிய நேரம்இது. நீங்கள் பாவச் சுவரை உடைத்து விசுவாசத்தால் ஜெபித்தவுடனே, சோதனைகளும் பாடுகளும் துரத்தியடிக்கப்படுவதை தவிர வேறு வாய்ப்பில்லை. சில நிகழ்வுகளில், நீங்கள் உங்கள் பாவத்தினால் அல்ல, ஆனால் கவிழ்ச்சியினால் சில கஷ்டங்களைச் சந்திக்கலாம். அப்பேர்ப்பட்ட சமயங்களிலும்கூட நீங்கள் அவரைச் சார்ந்து கொண்டால் தேவன் உங்கள் விசுவாசத்தின் அடிப்படையிலே கிரியைச் செய்வார். இயேசு சிலுவையிலே சபிக்கப்பட்டபடியால், விசுவாசத்தினால் யாரானாலும் அவர் தம் பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெற்று நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுதலைப் பெற முடியும்.

அப்படியானால், "ஆண்டவரே, நான் விசுவாசிக்கிறேன்!" என்று நாம் கூறும் அறிக்கை நிபந்தனையில்லாத மன்னிப்பை நமக்கு உறுதியாக அளிக்குமா? 1 யோவான் 1:7ல் வேதாகமம் நமக்குச் சொல்வது போல, "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." பாவ மன்னிப்பு என்பது நாம் "ஒளியிலே நடத்தல்" என்ற நிபந்தனையிலே உள்ளது. பாவம் செய்து கொண்டே இருந்தாலும் நாம் இரட்சிப்பை பெற முடியும் என்று கூறுவதை வேதத்தில் எங்கும் நாம் காண முடியாது.

இயேசுவும் மத்தேயு 7:21ல், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று நமக்குச் சொல்கிறார். ஆக, நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டு, நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்பி, இனி பாவம் செய்யாதபடி பிரயாசப்பட்டு, ஒளியிலே நடக்கும்போது மட்டுமே மன்னிப்பு அருளப்பட்டு பரிபூரண இரட்சிப்பு நிறைவேறும்.

### 3. இரண்டு கள்ளர்களால் பேசப்பட்டவைகளின் வேதாகம சம்பவத்தில் உள்ள வித்தியாசங்கள்

இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, மக்கள் பலர் கூடி இயேசுவை அவமானப்படுத்தி பரியாசம் பண்ணிக் கொண்டிருந்தனர். இயேசுவின் இரு பக்கங்களிலும் சிலுவையில் அறையப்பட்ட இரு கள்ளர்கள் இருந்தார்கள். அவைகளை குறித்து நாம் மத்தேயு 27:44ல், "அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்" என்றும் லூக்கா 23:39–43ல் நாம் கள்ளர்களில் ஒருவன் இயேசுவை, "இகழ்ந்தான் என்றும் மற்றொருவன் அவனைக் கடிந்துகொண்டான்" என்றும் பார்க்கிறோம்.

இந்தப் பதிவுகளிலுள்ள வித்தியாசத்தை நாம் எவ்விதமாக விளக்க முடியும்? இது எதிர்கால சந்ததியினர் இந்த நிகழ்வைக் குறித்து தெளிவான காட்சியை நீங்கள் பெறுவதற்காக தேவனுடைய கிரியையின் ஒரு பகுதியாய் இருக்கிறது. உங்கள் மனதில் ஒரு வரைபடம் வரையுங்கள்: கொல்கோதா உச்சியில் மூன்று சிலுவைகள் நிற்கின்றன, மரண தீர்ப்பு நடைபெறுவதை காணும்படி பெருந்திரள் கூட்டம் கூடியுள்ளது. ஈட்டிகளோடும் கேடயங்களோடும் கூடுதலாக பார்க்க திரண்டு வருகிறவர்களை அடக்க முயற்சிக்கும் ரோம போர்ச் சேவகர்கள் இருக்கின்றனர்.

இப்பேர்ப்பட்ட பயங்கர சூழ்நிலையில் கள்ளர்களின் ஒரு பக்கத்தில் நிற்கும் நபர் ஒருவர் அந்த கள்ளன் என்ன சொல்லுகிறானோ அதை தெளிவாய் கேட்டிருக்க முடியும், ஆனால் மற்ற கள்ளன் என்ன சொன்னானோ அதை தெளிவாய் கேட்டிருக்க முடியாது. வேறு வார்த்தையில், மனந்திரும்பிய கள்ளன் இயேசுவை நிந்தித்த கள்ளனை கடிந்து கொண்டது மனந்திரும்பிய கள்ளன் இயேசுவை நிந்திப்பது போல அங்கு கேட்கப்பட்டிருக்கலாம். ஆயினும், மனந்திரும்பிய கள்ளன் பக்கம் நின்று கொண்டிருந்த மக்கள் இயேசுவின் வார்த்தைகளையும் இரு கள்ளர்களின் வார்த்தைகளையும் தெளிவாக கேட்க முடிந்தது. அந்நிகழ்வை மிகத் தெளிவாக பதிவு செய்தனர்.

சர்வ வல்லமையுள்ள தேவன் வேதாகமத்தை எழுதியவருக்கு மாற்றப்பட்டுள்ள எல்லா விவரங்களையும் வெளிப்படுத்த முடியும் என்பது உண்மைதான். ஆனால், இப்பேர்ப்பட்ட வித்தியாசங்களை அனுமதித்ததன் மூலமாக, எப்படியாயினும், பரிசுத்த ஆவியின் உந்துதலோடு வேதாகமத்தை வாசிக்கும் மக்கள் இயேசுவின் சிலுவை பாடுகளை தெளிவான படமாக ஒரு நன்கு தேர்ச்சியான தியேட்டரில் பெரிய திரையில் பார்க்கும் ஒரு படத்திற்கு ஒத்ததாற்போல காண வேண்டும் என்பதற்காக தேவன் இதை சாத்தியப்படுத்தினார்.

ஆக, நம்முடைய எண்ணங்களின் விதிமுறையோடு ஒத்துப்போகாத வேதப்பகுதிகளை நாம் கடந்து வரும்போது, மாம்சீக எண்ணங்கள் மற்றும் நிலைத்தரங்களின் அடிப்படையில் அவைகளை நியாயந்தீர்ப்பதற்கு பதிலாக, நாம் பரிசுத்த ஆவியின் உந்துதலில் அதன் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை முதலாவது புரிந்துக் கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இப்போது இயேசுவானவர் தம் கரங்களிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்ட காரணம் என்ன என்பதை நீங்கள் கற்றுக் கொண்டீர்கள். இதை விசுவாசிப்பதால் நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நம்முடைய ஆண்டவருடைய அன்பை பரப்பும் ஆசீர்வதிக்கப்பட்ட தூதுவராக உங்கள் கரங்களும், கால்களும் மாறி நீங்கள் தேவனுடைய வார்த்தையை பரிசுத்த ஆவியின் உந்துதலின் மூலமாக புரிந்து கொள்ளுகிறவர்களாக மாறி, தேவனுடைய பிள்ளைகளாக நீங்கள் அந்தஸ்து பெற்றிருக்கிற சகல அதிகாரத்தையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கும்படி ஆண்டவருடைய நாமத்தில் நான் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புகின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)..." (அப். 17:25)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12)

# மருத்துவ பதிவின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்ட தேவனுடைய மாபெரும் சுகமாகுதலின் கிரியைகள்

ஜூன் 10–11, 2016லே ஸ்பெயினில் உள்ள வெலென்ஸியாவில் 13வது WCDN சர்வதேச கருத்தரங்கு நடைபெற்றது. இங்கு Dr. ஜேராக் லீ அவர்களது ஜெபத்தின்மூலமாக தேவனுடைய வல்லமையை அனுபவித்த விசுவாசிகளின் சாட்சிகளை நாம் கேட்போம்.

## கருத்தரிக்கும் ஆசீர்வாதம்: தேவன் அவள் கர்ப்பத்தை திறந்தார்

“மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள்” (ஆதியாகமம் 25:21).

சிருஷ்டிகராகிய தேவன்தான் ஸ்திரீயின் கர்ப்பத்தை திறக்கவும் மூடவும் முடியும். நீங்கள் மலட்டுத்தன்மையிலிருந்து கஷ்டப் பட்டால், தேவனுக்கு விரோதமான பாவச்சுவரை உடைத்து வல்லமையான போதகர் ஒருவருடைய ஜெபத்தைப் பெறும்போது, நீங்கள் கருத்தரிக்கும் ஆசீர்வாதத்தைப் பெற முடியும்.



மூப்பர் பூசான் கிம் திருமணமான பின்பு 7 ஆண்டுகள் பிள்ளை இல்லாதிருந்தார். அவரும் அவருடைய மனைவியும் சாத்தியமான எல்லா வகையான மருத்துவ சிகிச்சையையும் பயன்படுத்தினர். ஆனால் ஏதும் வேலைக்கு ஆகவில்லை. அதே நேரத்தில் அவர்கள் மான்மின் மத்திய திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டு அறிவர். ஜேராக் லீ அவர்களிடமிருந்து தேவனுடைய வார்த்தையை குறித்து கற்றறிந்தார்கள். ஜனவரி 2007ல், அவர்கள் அறிவர். லீ அவர்களது கருத்தரிக்கக்கூடிய ஆசீர்வாத ஜெபத்தைப் பெற்றார்கள். அவர்கள் நவம்பர் 2007ல் அழகான ஆராதிக்கப்படக்கூடிய பெண் பிள்ளையை தங்கள் மடியில் கிடைக்கப் பெற்றார்கள்.



கண்காணி முன்ஹோங் கிம் அவர்களும்கூட மருத்துவ ரீதியில் எல்லா முறைமையையும் முயற்சித்தார். காரணம் அவருக்கும் அவர் மனைவிக்கும் திருமணமாகி ஆறு வருடங்கள் ஆகியும் பிள்ளை இல்லாதிருந்தது. ஒரு முறைமையும் வேலை செய்யவில்லை. அக்டோபர் 1999ல், அவரது மனைவி அறிவர். லீ அவர்களது ஜெபத்தை பெற்று, பரிசுத்த ஆவியின் அக்கினி அவளது தலைக்குள்ளும் அவளது சரீரத்திற்குள்ளும் வருவதை அனுபவித்தார்கள். ஆகஸ்டு 2000ல் உடனடியாக அவர்கள் கர்ப்பந்தரித்து, ஆரோக்கியமான ஆண் பிள்ளையை பெற்றெடுத்தார்கள்.



போதகர் சூஹீ இம்–க்கு திருமணமாகி 13 ஆண்டுகளுக்குப் பின்னும் பிள்ளை இல்லாதிருந்தது. அவள் அதன் காரணத்தை கண்டறிய முற்பட்டும், கண்டறிய முடியவில்லை. அவளும் அவளது கணவரும் பிள்ளை பெறலாம் என்ற எண்ணத்தையும் விட்டுவிட்டு, பிள்ளையை தத்தெடுக்கலாம் என்று நினைத்தனர். 2007ல், அவர்களது மாமியாரால் மான்மின் மத்திய திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டு அறிவர். லீ அவர்களது ஜெபத்தின்மூலம் மக்கள் பலர் குழந்தையை கருவுற்றனர் என்பதை கண்டார்கள். அவர்கள் ஜெபத்தைப் பெற்றார்கள், ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. காரணம் அவர்கள் விசுவாசமில்லாமல் அதைச் செய்தார்கள். தேவன் அவர்களுக்காகவும் அவர்கள் கணவருக்காகவும், அவர்களுக்கிடையில் சமாதானத்தை காத்து விசுவாசத்தை அடையும்வரை காத்திருந்தார். இறுதியாக அவர்கள் விசுவாசத்தோடு ஜெபத்தைப் பெற்றபோது, கருத்தரிக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்று ஆரோக்கியமான மகனைப் பெற்றெடுத்தார்கள்.

## ஆகாயத்தையும் காலத்தையும் கடக்கும் ஜெபத்தின் மூலம்

“...ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்... நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்” (மத்தேயு 8:8–13).



சகோதரர் பிரமோத் குமாரின் மனைவிக்கு தைராய்டு பிரச்சனை இருந்தது. அது அவர்களுக்கு பலமுறை கருச்சிதைவை ஏற்படுத்தியது. அவர்கள் மந்திரவாதியினிடத்தில் உதவி கேட்டார்கள். இந்திய பாரம்பரிய மருத்துவத்தை சார்ந்துகொண்டார்கள். ஆனால் அவை அனைத்தும் பயனற்றுப் போனது. 2013ல் இந்த தம்பதியினர் இந்தியாவிலுள்ள டெல்லி மான்மின் சபைக்கு வழிநடத்தப்பட்டனர். ஜூலை 2014ல், அவர்கள் தங்கள் புகைப்படத்துடன் ஜெபவிண்ணப்பத்தை கொரியாவிலுள்ள அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு அனுப்பினார்கள். ஆகாயத்தையும் காலத்தையும் கடந்த ஜெபத்தைப் பெற்ற பிறகு, மனைவி கர்ப்பவதியாகி 14 வருட காத்திருப்பிற்குப்பின் முதல் பிள்ளையைப் பெற்றார்கள்.



சகோதரி சாடோ கிரோமி, திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் பிள்ளை இல்லாதிருந்தார்கள். அதனால் அவர்கள் கருத்தரிப்பு சிகிச்சை மையங்களில் மருத்துவ சிகிச்சைப் பெற்றார்கள். ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை.

பிப்ரவரி 2013ல், அவர்கள் போதகர் மியாகே டோக்கிகுனி அவர்கள் கொரியாவிற்குச் சென்றபோது தனது புகைப்படத்தை அவர்களிடம் கொடுத்து அவர்கள் சார்பாக அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தைப் பெறும்படியாக கேட்டுக்கொண்டார்கள். மே 2013ல் ஆகாயத்தையும் காலத்தையும் கடந்த ஜெபத்தை பெற்ற பிற்பாடு, அவள் கர்ப்பந்தரித்து, இறுதியாக அழகான மகளைப் பெற்றார்கள்.

## கைக்குட்டையின் வல்லமை ஜெபத்தின் மூலம்

“பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப் போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன” (அப். 19:11–12).



சகோதரர் ஜான்பாபு அவர்களுக்கு ஒரு பிரச்சனை இருந்தது, அது என்னவென்றால் அவருக்கு திருமணமாகி 8 ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. 2008ல், அவர் இந்தியாவில் உள்ள சென்னை மான்மின் திருச்சபையில் மின்சாரம் மற்றும் தண்ணீர் சம்பந்தமான வேலையை செய்ய துவங்கினார். அச்சமயத்தில், அவர் தேவனுடைய வல்லமையான கிரியைகளை அனுபவித்த திருச்சபை அங்கத்தினர்களின் சாட்சிகளை குறித்து கேள்விப்பட்டார். அவர் நம்பிக்கை பெறலானார். டிசம்பர் 2010ல், அவர் சென்னை மான்மின் திருச்சபையில் நடைபெற்ற கைக்குட்டை சுகமாகுதலின் கூட்டத்தில் பங்குபெற்று ஜெபத்தைப் பெற்றுக்கொண்டார் (அப். 19:11–12). ஜெபத்திற்குப் பின்பு, அவரது மனைவி பிப்ரவரி 2011ல் கர்ப்பவதியாகி அந்த நவம்பரில், அழகான மகளைப் பெற்றெடுத்தாள்.



சகோதரி ஹோர்டேன்சே பண்டோமி 1998ல் திருமணமாகி ஒரு மகளைப் பெற்றார்கள். ஆனால் அதன் பிற்பாடு ரூபெல்லா வைரஸினால் தாக்கப்பட்டார்கள். அதனால் அவர்களால் மறுபடியும் கருத்தரிக்க முடியவில்லை. 2008ல் அவர்கள் கின்ஷாசா மான்மின் திருச்சபையில் பங்குபெற்று மான்மின் ஜெபமைய தலைவி போக்நிம் லீ அவர்களது DR காங்கோ படைமுயற்சி கூட்டத்தில் பங்குப் பெற்றார்கள். அவர்கள் குழந்தைகளை பெற வேண்டும் என்ற மனப்பூர்வமான வாஞ்சையோடு கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றுக்கொண்டார்கள் (அப். 19:11–12). அதன் பிற்பாடு அவர்கள் ஒரு குழந்தையை கர்ப்பந்தரித்து ஒரு மகனைப் பெற்றார்கள். பிறகு, இரட்டை மகள்களைப் பெற்றார்கள். தற்போது அவர்கள் நான்கு பிள்ளைகளுக்கு தாயாக இருக்கிறார்கள்.

## மூட்டு குருத்தெலும்பு மற்றும் தசை நார்களின் மறுசிருஷ்டிப்பின் கிரியை

திரு. ஜூஹியோங் பார்க், வயது 48, தென்கொரியா



சிறுபிராயத்தில் அவர் கண்களுக்கு முன் கால்பந்தில் வெற்றியடையும் வாய்ப்பு இருந்தது. எனினும், அதிக பயிற்சி மற்றும் மூட்டில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த காயங்கள் அவரை கால்பந்து விளையாட்டை விட்டுவிடச் செய்தது. அவரது மூட்டுகள் அதிகமாக சேதப்பட்டன. அவர் காலிலிருந்த வேதனை மற்றும் தசைப்பிடிப்புகள் அடிக்கடி நடு இரவிலே அவரை விழித்தெழச் செய்தது. யாரோ ஒருவர் அவரது கால் தசைகளின் இருபக்கங்களையும் பிசக்கிவிட்டது போலவும், சில மக்கள் அவர் கால்களில் பெரிய ஊசிகளை வைத்து குத்துவது போலவும் மாபெரும் வேதனையில் இருந்தார்.

ஜூலை 2014ல் அவர் சுன்சியோன் மான்மின் திருச்சபையில் நடத்தப்பட்ட கைக்குட்டை ஜெபக்கூட்டத்திற்கு வழிநடத்தப்பட்டார் (அப். 19:11–12). உயர்திரு. ஹீசன்லீ அவர்கள் அவருக்காக கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்கள். அவரால் தனது மூட்டுகளை குந்தி மடக்கவும் சௌகரியமாக எழுந்து நிற்கவும் முடிந்தது. அவரது மூட்டுகளும் அவரது தசைகளும் அவைகள் சிதைவுறுவதுபோல சில விரிசல் விடும் சப்தமும் சில இரைச்சலும் உணடாக்கி கொண்டே இருந்தன. ஆனால் ஜெபத்திற்குப் பின்பு அப்பேர்பட்ட எந்த ஒரு சப்தமும் கேட்கவில்லை. கூட்டத்திற்கு பின்னர் அவர் மூன்றாவது மாடியிலிருந்து கட்டிடத்தின் முன்புள்ள வரவேற்பரை வரைக்கும் கீழே ஓடினார். அவருக்கு வலியே இல்லை. அவரது கால்களிலும் மூட்டுகளிலும் அவருக்கு இன்னமும் வலியே இல்லை.







ஜெபத்திற்கு முன்பு : பட்டேலர் எலும்பின் உள்குறுத்தெலும்பு மெலிந்துள்ளது.
ஜெபத்திற்கு பின்பு : குரோசியேட் தசைநாரும் சிக்கலான பின்பக்க வஸ்துகளும் தசை நார்களும் குணமாயின.

## கடுமையான மூளையழற்சி அவளை கோமாவிற்குள் தள்ளியது, எனினும் ஜெபம் அவளை எழுப்பியது!

**செல்வி. ஷியா ஸ்வீ யோன், வயது 32, மலேசியா**



2015, மே 14ல், செல்வி. ஷியா ஸ்வீ யோன் தலைவலி, காய்ச்சல் மற்றும் வயிற்று குமட்டல் காரணத்தினால் ஒரு மருத்துவமனையிலிருந்து Dr. தீமோத்தேயு சங் அவர்களின் பராமரிப்பு மையத்திற்கு மாற்றப்பட்டாள். ஒரு CT ஸ்கேன் எடுக்கப்பட்டது, அது அவளுக்கு மூளையழற்சி இருப்பதை காண்பித்தது. மே 15 அன்று காலையில் அவள் திடீரென்று கோமா நிலைக்குள்ளானாள். Dr. சங் அவள் நலமடைவதைக் குறித்து சந்தேகப்பட்டார்.

அதற்கு அடுத்த நாள், Dr. சங் கொலாலம்பூரில் நடைபெற்ற 12வது WCDN மலேசிய சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ கருத்தரங்கில் பங்குப்பெற்றார். அவர் உயர்திரு. ஹீசன் லீ அவர்களின் கைக்குட்டை ஜெபத்தை சுகமளிக்கும் கூட்டத்தில் நோயாளிக்குப் பதிலாக பெற்றுக் கொண்டார் (அப். 19:11–12).

அந்த இரவிலேயே நோயாளி ஒரு சொப்பனத்தைக் கண்டார். ஆண்டவர் வெளிச்சத்திற்குள் தோன்றி அவளை சந்தித்து, அவளைப் பார்த்து பிரகாசமாகப் புன்னகைத்தார். அவள் சொப்பனத்திலிருந்து எழுந்து, நினைவு திரும்பினாள். அல்லேலூயா!



ஜெபத்திற்கு முன்பு, மூளையில் பரவலாக திரவக்கோர்வை இருந்தது(மேலே). ஆனால் ஜெபத்திற்குப் பிறகு அது மறைந்து விட்டது (கீழே).



## முதுகு காசநோயினால் பக்கவாதமடைந்தவர் வாகனத்தை ஓட்டுகின்ற அளவிற்கு ஆரோக்கியமாக உள்ளார்!

**திரு. பன்வாரிலால், வயது 47, இந்தியா**



2012ல், திரு. பன்வாரிலாலுக்கு முதுகு காசநோய் இருப்பது கண்டறியப்பட்டது. மிகவும் வேதனைப்படுத்தும் வலி இருந்தது. அவர் அறுவைச்சிகிச்சை செய்தும் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. அவருடைய இடுப்புக்கு கீழே இடதுபுற பக்கவாதமடைந்ததால், அவரால் உட்கார முடியாது, அவராகவே கழிவறைக்கும் போக முடியாது. அவர் படுக்கையில் இருந்துகொண்டே அனைத்தையும் செய்ய வேண்டியிருந்தது.

இதற்கிடையில், அவருடைய மகன் பங்குப்பெறுகிற டெல்லி மான்மின் சபையின் போதகர் ஜான் S. கிம் அவரைச் சந்தித்து, அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையை வைத்து அவருக்காக ஜெபித்தார். ஒவ்வொரு முறை அவர் கைக்குட்டை ஜெபத்தைப் பெறும்போது (அப். 19:11–12) அவர் நன்றாக முன்னேற்றமடைந்தார். அவர் சபைக்கு வந்து பதிவுசெய்தார்; தன் கிறிஸ்தவ ஜீவியத்தை துவக்கினார்; GCN TV வாயிலாக அறிவர். லீ அவர்களின் ஜெபத்தையும் பெற்றுக்கொண்டார். அவர் முற்றிலுமாக சுகத்தைப் பெற்றுக்கொண்டார். அல்லேலூயா! தற்போது அவர் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுகிறார். ஞாயிற்றுக்கிழமைகளில் ஜனங்களை சபைக்கு அழைத்துவர தன்னார்வமாக வேலை செய்கிறார்.





அவர் சுகமடைவதற்கு முன்பு எடுக்கப்பட்ட MRI: இரண்டாவது மற்றும் மூன்றாவது முதுகு தண்டுவட முள்ளெலும்புகள் முதுகெலும்பு காசநோயினால் சேதமடைந்திருந்தன.

## தேவனுடைய வல்லமையால் பித்தப்பை கல் நீங்கியது


**செல்வி. மரியா மக்குவடொ, வயது 22, பெரு**



2014 செப்டம்பரில், அவளுக்கு கடுமையான வயிற்று வலி உண்டானது; அது சில மாதங்களாக தொடர்ந்தது. அவளுக்கு ஒரு மருத்துவ சோதனை நடந்தது. அவளுடைய மருத்துவர் அவளுக்கு பித்தப்பையில் 16 மிமீ அளவிலான கல் இருப்பதாகச் சொன்னார். அவள் தன்னுடைய பெரு மான்மின் சபையின் போதகரிடத்தில் கைக்குட்டையை (அப். 19:11–12) வைத்து ஜெபிக்கும்படி கேட்டாள். ஜெபத்திற்குப் பின்னர் அவளுக்கு வலியே இல்லை; குமட்டலும்கூட ஏற்படவில்லை.

எப்படியிருந்தாலும், ஜனவரி 2015ல், அவள் மற்றொரு அல்ட்ராசவுண்ட் பரிசோதனையை எடுத்தபொழுது, மருத்துவர் கல் 18.2 மிமீ அளவிற்கு பெரியதாக உள்ளது என்று கூறினார். ஆகவே, அவள் தன்னுடைய கடந்த கால வாழ்க்கையில் வைத்திருந்த அனைத்து தீய எண்ணங்களையும், உணர்வுகளையும் குறித்து முற்றிலுமாக மனந்திரும்பினாள். அதன்பிறகு, தன்னுடைய தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களை தன் சொப்பனத்தில் பார்த்தாள். அவர் அவளுடைய வியாதியின் இடத்தில் கரங்களை வைத்து ஜெபித்தார்.

அவளுக்கு ஆச்சரியமளிக்கும் விதமாக, அதைத் தொடர்ந்து எடுத்த அல்ட்ராசவுண்ட் பரிசோதனை பித்தப்பையில் கல்லே இல்லை என்று காண்பித்தது. அவள் முற்றிலும் இயல்பாக மாறினாள்.




18.2 மி.மீ அளவுடைய பித்தப்பை கல் மறைந்தது.

## கைக்குட்டை ஜெபத்தினால் அவருடைய முதுகெலும்பு முறிவு சுகமானது


**திரு. ஜாக்கப் ஒடியெனோ ஒஜ்வாங், வயது 27, கென்யா**



2015, மார்ச் 23 அன்று, அவர் நான்கு மீட்டர் உயரமுடைய கட்டடத்தின் கூரையில் வேலைப் பார்த்து கொண்டிருந்தார். திடீரென்று, கட்டிடத்திலிருந்த கட்டைகள் உடைந்ததினால், அவர் தரையிலே விழுந்துவிட்டார். அவர் அசையமுடியாதபடிக்கு அவருடைய முதுகில் மிகுந்த வலி உண்டானது; மிகவும் சிரமப்பட்டு சுவாசித்தார். அவருடைய எக்ஸ்ரே–வானது அவருடைய முதுகெலும்பு முறிந்ததை காண்பித்தது. அவருக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது.

அதற்கு அடுத்த நாள், அவர் நைரோபி மான்மின் சபையின் பிஷப் Dr. மியாங்ஹொ ச்யாங் அவர்களின் கைக்குட்டை ஜெபத்தை (அப். 19:11–12) பெற்றுக்கொண்டார். பக்கவாதமடைந்த கால்களிலும், இடுப்பு பகுதியிலும் அவர் அசைவை உணர்ந்தார். அவருடைய கால்களில் இருந்த வலியானது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. அவரால் அசைக்க முடிந்தது. மார்ச் 31ம் தேதி, விசுவாசத்தோடு மருத்துவமனையை விட்டு வந்துவிட்டார். அடுத்தநாள், முனைவர். ச்யாங் அவர்களின் ஜெபத்தை மீண்டும் பெற்ற பிறகு, அவருக்கு பெலன் கொடுக்கப்பட்டு, படுக்கை–யிலிருந்து எழுந்து உட்கார்ந்தார்; நின்றார், அவராகவே நடந்தார்!

அவர் வேகமாக நலமடைந்தார். ஏப்ரல் 23 அன்று வழக்கம்போல வேலைக்குச் சென்றார்.



CT ஸ்கேன் ஜெபத்திற்கு முன்பு (மேலே) ஜெபத்திற்குப் பின்பு (கீழே)

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com